இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டம்

---

(1999, திசெம்பர் மாதம் 31 ஆம் திகதிவரையிலான திருத்தங்களுடன்)

---

பாராளுமன்றச் செயலகத்தினால் பிரசுரிக்கப்பட்டது.

பாராளுமன்றத்தினதும் அதன் உறுப்பினர்களினதும் சிறப்புரிமைகளையும், விடுபாட்டுரிமைகளையும், தத்துவங்களையும் வெளிப்படுத்துவதற்கும், வரைவுபடுத்துவதற்கும் ; பாராளுமன்றத்தில் பேச்சு, விவாதம் அல்லது நடவடிக்கைகள் என்பவற்றுக்கான சுதந்திரத்தைப் பாதுகாக்கப் பெறுவதற்கும் ; பாராளுமன்றச் சிறப்புரிமை மீறல்களுக்கான தண்டனைக்கு ஏற்பாடுசெய்வதற்கும் ; பாராளுமன்ற அறிக்கைகள், பத்திரங்கள், நிகழ்ச்சிக் குறிப்புகள், தீர்மானங்கள் அல்லது நடவடிக்கைகள் என்பவற்றை வெளியிடுவதில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஆட்களுக்குப் பாதுகாப்பளிப்பதற்குமானதொரு சட்டம்

சட்டங்கள் இல.
1953 இன் 21,
1978 இன் 5,
1980 இன் 17,
1984 இன் 25,
1987 இன் 37,
1997 இன் 27.

(1978 ஆம் ஆண்டின் 5 ஆம்
இலக்க, தே.அ.பே. சட்டம் — 1978 பெப்புருவரி 02)
(1980 ஆம் ஆண்டின் 17 ஆம்
இலக்கச் சட்டம் — 1980 ஏப்பிறல் 17)
(1984 ஆம் ஆண்டின் 25 ஆம்
இலக்கச் சட்டம் — 1984 ஜூன் 29)
(1987 ஆம் ஆண்டின் 37 ஆம்
இலக்கச் சட்டம் — 1987 செத்தெம்பர் 23)
(1997 ஆம் ஆண்டின் 27 ஆம்
இலக்கச் சட்டம் — 1997 ஒற்றோபர் 21)

(1953 ஏப்பிறல் 7)

1. இச்சட்டம் பாராளுமன்ற (தத்துவங்களும், சிறப்புரிமைகளும்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலேயொழிய — பொருள் கோடல்.

"செயலாளர்" என்பது, பாராளுமன்றச் செயலாளர் நாயகம் எனப் பொருளாகும் ;

"குழு" என்பது, பாராளுமன்றத்தின் ஏதேனும் நிலையியற் குழு, தெரிவுக்குழு அல்லது ஏனைய குழு எனப் பொருளாகும் ;

"பாராளுமன்றம்" என்பது, இலங்கைப் பாராளுமன்றம் எனப் பொருளாகும் என்பதுடன் குழுவொன்றையும் உள்ளடக்கும் ;

"உறுப்பினர்" என்பது, பாராளுமன்றத்தின் ஓர் உறுப்பினர் எனப் பொருளாகும் என்பதுடன், தலைவரையும், சபாநாயகரையும், பாராளுமன்றத்தில் அல்லது குழுவில் தலைமைதாங்கும் எவரேனும் உறுப்பினரையும் உள்ளடக்கும் ;

"பாராளுமன்ற அலுவலர்" என்பது, நிரந்தரமாகவோ, தற்காலிகமாகவோ பாராளுமன்றத்தின் பணியாட்டொகுதிக்குக் காலத்திற்குக்காலம் நியமிக்கப்படக்கூடிய எவரேனும் ஆள் எனப் பொருளாகும் என்பதுடன், செயலாளரையும் பாராளுமன்றத்தின் வளவுகளினுள் கடமையில் ஈடுபட்டுள்ள எவரேனும் பொலிசு அலுவலரையும் உள்ளடக்கும் ;

"தலைவர்" அல்லது "சபாநாயகர்" என்பது, பாராளுமன்றத்திற்கு அப்போதைக்குத் தலைமைதாங்கும் உறுப்பினரை உள்ளடக்கும்.

## பாகம் I

## சிறப்புரிமைகள் விடுபாட்டுரிமைகள் பொதுவிலான தத்துவங்களும், குறைநிரப்பான ஏற்பாடுகளும்

பேச்சுச் சுதந்திரமும், விவாதச் சுதந்திரமும்.

3. பாராளுமன்றத்தின் பேச்சுச் சுதந்திரமும், விவாதச் சுதந்திரமும், நடவடிக்கைகள் சுதந்திரமும் இருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பேச்சுச் சுதந்திரம், விவாதச் சுதந்திரம் அல்லது நடவடிக்கைகள் சுதந்திரம் ஏதேனும் நீதிமன்றத்திலோ பாராளுமன்றத்திற்கு புறம்பான ஏதேனும் இடத்திலோ வசைசாட்டப்பட அல்லது கேள்விக்குட்படுத்தப்படப் பொறுப்புடையதாதல் ஆகாது.

*குறித்தசில விடயங்களில் உறுப்பினர்கள் வழக்கு நடவடிக்கைக்கு ஆளாதல் ஆகாது.*

4. உறுப்பினர் எவரும்,பாராளுமன்றத்தில் அவர் கூறிய ஏதனதும், காரணமாகவோ மனு, சட்டமூலம், தீர்மானம், பிரேரணை என்ற வகையாகவோ, வேறுவகையாகவோ பாராளுமன்றத்தின் முன்னிலையில் அவர் கொணர்ந்திருக்கக்கூடிய ஏதேனும் கருமம் அல்லது காரியம் காரணமாகவோ ஏதேனும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுக்கு, கைதுசெய்யப்படுவதற்கு, மறியற்றண்டனைக்கு அல்லது சேதவீடுகளுக்கு ஆளானவராதல் ஆகாது.

*குடியியல் வழக்கு நடவடிக்கைகளில் கைதுசெய்யப்படாதிருப்பதற்கான சுதந்திரம்.*

5. இச்சட்டத்தின் மீறுகையொன்றுக்குத் தவிர, உறுப்பினர் எவரும், குடியியல் நடவடிக்கைகளில் விடயப்பொருளாக இருக்கக்கூடிய ஏதேனும் தனிசு அல்லது கருமம் சம்பந்தமாக, பாராளுமன்றத்தின் ஏதேனும் கூட்டத்திற்கு அல்லது அமர்வுக்குச் செல்லும்போது அல்லது சமுகமளித்திருக்கும்போது அல்லது அதிலிருந்து திரும்பும்போது கைதுசெய்யப்படுவதற்கு, தடுத்து வைக்கப்படுவதற்கு அல்லது தாக்கப்படுவதற்கு ஆளானவராதல் ஆகாது :

ஆயின், இப்பிரிவின்கீழ் ஏதேனும் விடுபாட்டுரிமைக்கு அல்லது சிறப்புரிமைக்கு வேறுவகையில் உரித்துடையவரும், கடனிறுக்க வகையற்ற ஏதேனும் செயலைப் புரிந்திருப்பதாகக் கருதப்படுபவருமான எவரேனும் ஆளை, அத்தகைய விடுபாட்டுரிமையோ, சிறப்புரிமையோ இல்லாதவர் என்றாற்போன்று கடனிறுக்க வகையின்மைக் கட்டளைச் சட்டத்தின்கீழ் கையாளலாம்.

*ஆள் எவரும்,சபையின் அதிகாரத்தின் கீழ் செய்யப்பட்ட செயல்களுக்காக சேத வீடுகளுக்குப் பொறுப்புடையவராதல் ஆகாது.*

6. ஆள் எவரும், பாராளுமன்றத்தின் அதிகாரத்தின்கீழும், அதன் சட்டமுறையான தத்துவங்களுக்குட்பட்டும் செய்யப்பட்ட ஏதேனும் செயலுக்காக சேதவீடுகளுக்கோ, வேறு வகையிலோ பொறுப்புடையவராதல் ஆகாது.

*விடுபாட்டுரிமைகள் பொதுமக்கள் சபையினால் துய்க்கப்படும் அதே விடுபாட்டுரிமைகளாக இருத்தல் வேண்டும்.*

7. பாராளுமன்றமும் அதன் உறுப்பினர்களும், இச்சட்டத்தினால் அளிக்கப்பட்ட சிறப்புரிமைகள், விடுபாட்டுரிமைகள், தத்துவங்களுடன் மேலதிகமாக ஐக்கிய இராச்சியப் பாராளுமன்றத்தின் பொதுமக்கள் சபையும், அதன் உறுப்பினர்களும் அப்போதைக்குக் கொண்டிருக்கும், துய்க்கும், பிரயோகிக்கும் அத்தகைய, அதேபோன்ற விடுபாட்டுரிமைகளைக் கொண்டிருத்தலும், துய்த்தலும் பிரயோகித்தலும் வேண்டும்.

*சிறப்புரிமைகள் சம்பந்தப்பட்ட விசாரணைகளில் பொதுமக்கள் சபையின் நாளேடுகள் முதற் றோற்றச் சான்றாக விருத்தல்.*

**8.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஐக்கிய இராச்சியப் பாராளுமன்றத்தின் பொதுமக்கள் சபையின் கட்டளையின் பேரில் அல்லது அச்சபையின் அச்சீட்டாளரினால் அச்சிடப்பட்டிருக்கின்ற அல்லது அச்சிடப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுகின்ற சொல்லப்பட்ட சபையினது நாளேடுகளின் அல்லது நடவடிக்கைகளின் அல்லது சொல்லப்பட்ட சபையினது ஏதேனும் குழுவினது அறிக்கையின் பிரதியொன்று, பாராளுமன்றத்தின் அல்லது அதன் உறுப்பினர்களின் சிறப்புரிமைகள், விடுபாட்டுரிமைகள், தத்துவங்கள் சம்பந்தமான ஏதேனும் விசாரணையில் அது அத்தகைய பிரதி என்பதான எண்பிப்பின்றி முதற்றோற்றச் சான்றாகப் பெற்றுக்கொள்ளப் படுதல் வேண்டும்.

*சிறப்புரிமைகள் நீதிமுறைக் கவனத்திற்குட்படல்.*

**9.** பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகள், விடுபாட்டுரிமைகள் தத்துவங்கள் யாவும், இலங்கையின் பொதுச் சட்டத்தினதும், பகிரங்கச் சட்டத்தினதும் பகுதியாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அதனை வழக்குரைக்க அவசியமாதலும் ஆகாது. ஆனால் அவை இலங்கையின் அனைத்து நீதிமன்றங்களிலும் நீதிமுறைக் கவனத்துக்குட்படுவனவாதல் வேண்டும்.

*சாட்சிகளை வருகை தருமாறு கட்டளை யிடுவதற்குள்ள தத்துவம்.*

**10.** பாராளுமன்றமும் அத்துடன் ஆட்களை, பத்திரங்களை, பதிவேடுகளை, அழைப்பதற்கு பாராளுமன்றத்தின் கட்டளை யொன்றின்மூலம் உரியமுறையில் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் குழுவும், எவரேனும் ஆளை, பாராளுமன்றத்தின் முன்னிலைய்யில் அல்லது அத்தகைய குழுவின் முன்னிலையில் வருகை தருமாறும், அத்தகைய ஆளின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டின்கீழுள்ள ஏதேனும் பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது ஆவணத்தைக் காண்பிக்குமாறும் கட்டளையிடலாம்.

*வருகைபற்றி அழைப் புக் கட்டளைகள் மூலம் அறிவிக்கப்பட வேண்டும்.*

**11.** பாராளுமன்றத்தின் முன்னிலையில் அல்லது ஏதேனும் குழுவின் முன்னிலையில் வருகைதருமாறு அல்லது ஆவணங்களைக் காண்பிக்குமாறு கோரும் கட்டளை எதுவும், தலைவரின் அல்லது சபாநாயகரின் அல்லது குழுத்தவிசாளரின் பணிப்பின்பேரில் வழங்கப்பட்ட செயலாளரின் கைப்பட்ட அழைப்புக்கட்டளையொன்றின்மூலம், வருகை தருமாறு அல்லது ஆவணங்களைக் காண்பிக்குமாறு தேவைப்படுத்தப்பட்ட ஆளுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன் அத்தகைய

ஒவ்வொரு கட்டளையிலும் அழைப்பு விடுக்கப்பட்ட ஆள் வருகைதருமாறு தேவைப்படுத்தப்பட்ட நேரமும், இடமும், அவர் காண்பிக்குமாறு தேவைப்படுத்தப்பட்ட குறிப்பிட்ட ஆவணங்களும் எடுத்துக்கூறப்படுதல் வேண்டும். அத்துடன் அழைப்புக்கட்டளையானது, ஒன்றில் அதன் பிரதியொன்றை அவரிடம் ஒப்படைப்பதன்மூலம் அல்லது அவர் இலங்கையில் வழமையாக வதிகின்ற அல்லது வதிவதாகக் கடைசியாக அறியப்பட்ட இடத்தில் பிரதியொன்றை வயதுவந்த எவரேனும் ஆளிடம் விட்டுவைப்பதன்மூலம், அதனகத்துக் குறிப்பிடப்பட்ட ஆளிடம் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன் அத்தகைய அழைப்புக்கட்டளையின்மீது வருகைதரும் ஆளுக்கு, அவர் பாராளுமன்ற அவையிலிருந்து ஐந்து மைல்களினுள் வதிபவராக இல்லாவிடில், தலைவரினால் அல்லது சபாநாயகரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகை அவரது செலவுகளுக்காகச் செலுத்தப்படுதல் வேண்டும்.

சாட்சிக்காரர்கள் சத்தியத்தின்மீது விசாரிக்கப்படலாம்.

**12.** பாராளுமன்றத்தின் முன்னிலையில் அல்லது ஒரு குழுவின் முன்னிலையில் விசாரணைக்குட்பட்ட விடயப்பொருள் தொடர்பிலான எவையேனும் நிகழ்வுகளும், கருமங்களும், விடயங்களும் சாட்சிக்காரர்களை வாய்மொழி மூலம் விசாரணை செய்வதன் வாயிலாக உறுதிப்படுத்தப்பட வேண்டும் அல்லது வேறு வகையில் நிச்சயிக்கப்பட வேண்டும் என சபை அல்லது அத்தகைய குழு தேவைப்படுத்தலாம் என்பதுடன் தலைவர் அல்லது சபாநாயகர் அல்லது குழுவின் தவிசாளர் அல்லது அந்நோக்கத்துக்கென விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட ஆள் எடுத்தோதுவிக்கக்கூடிய சத்தியத்தின் அல்லது உறுதியுரையின் மீது அத்தகைய எவரேனும் சாட்சிக்காரரை விசாரிக்கச் செய்விக்கலாம்.

வினாக்களுக்கு விடையளிப்பதற்கான அல்லது பத்திரங்களைக் காண்பிப்பதற்கான ஆட்சேபனை தீர்மானத்திற்கென பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டும்.

**13.** பாராளுமன்றத்தின் முன்னிலையில் அல்லது ஏதேனும் குழுவின் முன்னிலையில் வருகைதருமாறு கட்டளையிடப்பட்ட எவரேனும் ஆள் அல்லது எவையேனும் பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது ஆவணத்தைக் காண்பிக்குமாறு கட்டளையிடப்பட்ட எவரேனும் ஆள், அவரிடம் கேட்கப்பட்ட வினாவுக்கு விடையளிக்க அல்லது ஏதேனும் பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது ஆவணத்தைக் காண்பிக்க, அது தனிப்பட்ட தன்மைத்தானதும், விசாரணைக்குட்பட்ட விடயப் பொருளைப் பாதிக்காததும் என்னும் ஏதுவின்மீது மறுத்தால், (விடயத்திற்கேற்ப) தலைவர் அல்லது சபாநாயகர்

அல்லது குழுவின் தவிசாளர் அல்லது தலைமைதாங்கும் உறுப்பினர் அத்தகைய வினாக்களுக்கு விடையளிப்பதினின்றும் அல்லது அத்தகைய பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது ஆவணத்தைக் காண்பிப்பதினின்றும் மன்னிப்பளிக்கலாம் அல்லது விடையளிக்குமாறு அல்லது அதனைக் காண்பிக்குமாறு கட்டளையிடலாம்.

பாராளுமன்றத்தின் அல்லது குழுவின் முன்னிலையில் பொய்யுரைப்பதற்கான தண்டம்.

14. (அ) பாராளுமன்றத்தின் அல்லது ஏதேனும் குழுவின் முன்னிலையில் (அந்த ஆள் சத்தியத்தைச் செய்திருப்பினும் அல்லது பயபக்தியான உறுதியுரையை அல்லது வெளிப்படுத்துகையைச் செய்திருப்பினும் சரி அல்லாவிடினுஞ்சரி) இப்பிரிவின்கீழான தண்டனைக்கான அவரது பொறுப்புப்பற்றி முறையாக எச்சரிக்கப்பட்ட பின்னரும், ஏதேனும் விசாரணை நெறியின்போது அவரிடம் கேட்கப்பட்ட, விசாரணைக்குட்பட்ட விடயப்பொருளுக்கு முக்கியமானதான ஏதேனும் கேள்விக்குப் பொய்யான மறுமொழியை உட்கருத்துடன் அளிப்பவரான ; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக அவரால் செய்யப்படும் ஏதேனும் கூற்றின்போது பொய்யான சான்றை உட்கருத்துடன் அளிப்பவரான,

எவரேனும் ஆள் (அவர் குற்றவாளியாகக் கூடிய இச்சட்டத்தின் பாகம் II இன் கீழான ஏதேனும் தவறுடன் சேர்த்து மேலதிகமாக) தண்டனைச் சட்டக்கோவையின் 190 ஆம் பிரிவின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதலும் வேண்டும்.

தண்டனைச் சட்டக்கோவையின் 190 ஆம் பிரிவின்கீழான தவறுக்காக அத்தகைய ஆளுக்கு எதிரான குற்றவழக்கு எதுவும், சட்டத்துறைத் தலைமையதிபதியினால் அல்லது அவரது அனுமதியுடன் தவிர தொடுக்கப்படுதல் ஆகாது.

சிறப்புரிமை பெற்ற சான்று பற்றிய பாராளுமன்றத்தின் வழக்காறு ஏற்புடைத்தாதல்.

15. சான்று அளிக்குமாறு அல்லது ஆவணம் ஒன்றைக் காண்பிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்ட ஆள், அத்தகைய சான்று தொடர்பில் அல்லது அத்தகைய ஆவணத்தைக் காண்பித்தல் தொடர்பில், ஏதேனும் உரிமைக்கு அல்லது சிறப்புரிமைக்கு உரித்துடையவரா அல்லரா என பாராளு

மன்றத்தில் அல்லது ஏதேனும் குழுவில் வினா எதுவும் எழுமிடத்து, அவ்வினாவானது, ஐக்கிய இராச்சியப் பாராளுமன்றத்தின் பொதுமக்கள் சபையில் அப்போதைக்குக் காணப்படும் ஒத்தவிடயங்களிலான வழக்காறுக்கு இணங்க தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

சான்று தொடர்பில் சாட்சிக்காரர் களின் விடுபாட்டுரிமை.

**16.** (1) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, பாராளுமன்றத்தின் அல்லது குழுவின் முன்னிலையில் சான்று அளிப்பவரான ஆள் ஒருவர், அத்தகைய சான்றில் அவர் கூறியிருக்கக்கூடிய எதனதும் காரணமாக எவையேனும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுக்கு ஆளானவராதல் ஆகாது.

(2) மூன்றாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நடவடிக்கைகளில் தவிர, பாராளுமன்றத்தின் அல்லது ஒரு குழுவின் முன்னிலையில் அளிக்கப்பட்ட சான்றில் எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட கூற்று எதுவும், எவையேனும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில் அந்த ஆளுக்கு எதிரான சான்றாக ஏல்தகவுடையதாதல் ஆகாது.

(3) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ள எதுவும், தண்டனைச் சட்டக்கோவையின் 190 ஆம் பிரிவின் கீழான தவறொன்றுக்காக அல்லது பாராளுமன்றத்தின் அல்லது ஒரு குழுவின் முன்னிலையில் அவரால் அளிக்கப்பட்ட ஏதேனும் சான்று தொடர்பில் இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறுக்காக எவரேனும் ஆளுக்கு எதிரான எவையேனும் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்படுவதை அல்லது நிலைநிறுத்தப்படுவதைத் தடுப்பதாதல் அல்லது தடுப்பதாகக் கருதப்படுதல் ஆகாது.

பாராளுமன்றத்திலான அல்லது குழுவிலான நடவடிக்கைகள் பற்றிய சான்று அனுமதியின்றி அளிக்கப்படலாகாது.

**17.** பாராளுமன்றத்தின் உறுப்பினர் அல்லது அலுவலர் எவரும், பாராளுமன்றத்தின் முன்னிலையில் அல்லது ஏதேனும் குழுவின் முன்னிலையில் சான்று பற்றிய நிகழ்ச்சிக் குறிப்புக்களை எடுப்பதற்கு தொழிலுக்கமர்த்தப்பட்ட சுருக்கெழுத்தாளர் எவரும், அத்தகைய சான்றின் பொருளடக்கம் தொடர்பில்

அல்லது பாராளுமன்றத்தின் அல்லது ஏதேனும் குழுவின் முன்னிலையில் இடப்பட்ட ஏதேனும் எழுத்துப்பிரதியின் அல்லது ஆவணத்தின் பொருளடக்கம் தொடர்பில் அல்லது பாராளுமன்றத்தினது உறுப்பினர் குழாத்தில் அல்லது ஏதேனும் குழு முன்னிலையில் இடம்பெற்ற எவையேனும் நடவடிக்கைகள் அல்லது விசாரணை தொடர்பில் பாராளுமன்றத்தின் விசேட அனுமதியை முதலில் கேட்டுப்பெற்றிருந்தாலேயொழிய, வேறெவ்விடத்திலும் சான்று அளித்தல் ஆகாது.

*பாராளுமன்றத்தின் கட்டளைமூலம் அச்சிடப்பட்ட விடயம் சான்றாக ஏற்கப்பட வேண்டும்.*

**18.** பாராளுமன்றத்தின் அல்லது எவரேனும் உறுப்பினரின் சிறப்புரிமைகள், விடுபாட்டுரிமைகள், தத்துவங்கள் சம்பந்தப் பட்ட ஏதேனும் விசாரணையின்மீது, அராசங்க அச்சகரால் அச்சிடப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படும் சபையினது நிகழ்ச்சிக் குறிப்புக்களின் அல்லது நடவடிக்கைகளின் பிரதி எதுவும், அத்தகைய பிரதி அவ்வாறு அச்சிடப்பட்டது என எண்பிப்பு எதுவும் கொடுக்கப்படாது, அனைத்து நீதிமன்றங்களிலும், இடங் களிலும் அத்தகைய நிகழ்ச்சிக்குறிப்புக்கள் அல்லது நடவடிக்கை கள் பற்றிய சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

*பாராளுமன்றத்தினது அதிகாரத்தின் கீழ் வெளியிடப்பட்ட அறிக்கைகள் முதலி யனவற்றை வெளி யிடுவதற்கும் அத் துடன் அவற்றின் பிரதிகளை அல்லது அவற்றிலிருந்து பிரித்தெடுத்த பகுதி களை வெளியிடு வதற்குமான பாதுகாப்பு.*

*[பி 2, 1984 இன் 25]*

**19.** (1) (அ) பாராளுமன்றத்தின் அல்லது அதன் ஏதேனும் குழுவின் கட்டளைப்படி அல்லது அதிகாரத் தின்கீழ் வெளியிடப்பட்ட அறிக்கை, பத்திரம், நிகழ்ச்சிக்குறிப்பு, தீர்மானம் அல்லது நடவடிக்கை ஒன்றாக இருக்கும் ஏதேனும் அறிக்கையை, பத்திரத்தை, நிகழ்ச்சிக் குறிப்பை, தீர்மானத்தை அல்லது நடவடிக்கை களை ; அல்லது

(ஆ) ஏதேனும் அத்தகைய அறிக்கையின், பத்திரத் தின், நிகழ்ச்சிக்குறிப்பின், தீர்மானத்தின் அல் லது நடவடிக்கைகளின் பிரதியொன்றினை,

எவரேனும் ஆள் அல்லது அவரது சேவையாளர் வெளியிட்ட தற்காக அல்லது வெளியிட்ட காரணத்துக்காக அல்லது வெளியிட்டது தொடர்பாகத் தொடரப்பட்ட எவையேனும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில் எதிராளியாக இருக்கும் அத்தகைய ஆள், தமது உளக்கருத்துப் பற்றி இருபத்து நான்கு மணிநேர அறிவித்தலை வழக்காளிக்கு அல்லது வழக்குத் தொடுநருக்குக் கொடுத்ததன்மேல் —

(i) பந்தி (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட வெளியீடு ஒன்று தொடர்பான எவையேனும் குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகளின் விடயத்தில், அத்தகைய வழக்கு நடவடிக்கைகள் எந்த அறிக்கை, பத்திரம், நிகழ்ச்சிக் குறிப்பு, தீர்மானம் அல்லது நடவடிக்கைகள் தொடர்பாகத் தொடரப்பட்டனவோ அந்த அறிக்கை, பத்திரம், நிகழ்ச்சிக் குறிப்பு, தீர்மானம் அல்லது நடவடிக்கைகள் பாராளுமன்றத்தினது அல்லது அதன் குழு எதனதும் கட்டளைப்படி அல்லது அதிகாரத்தின்கீழ் அத்தகைய ஆளினால் அல்லது அவரது சேவையாளரினால் வெளியிடப்பட்டதெனக் கூறும் சபாநாயகரின் அல்லது பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் கைப்பட்ட சான்றிதழ் ஒன்றினை அத்தகைய வழக்கு நடவடிக்கைகள் எந்த நீதிமன்றத்தில் நடாத்தப்படுகின்றனவோ அந்த நீதிமன்றத்தின் முன்னர் கொண்டுவரலாம் ; அத்துடன்

(ii) பந்தி (ஆ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட வெளியீடு ஒன்று தொடர்பான எவையேனும் குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகளின் விடயத்தில் அத்தகைய வழக்கு நடவடிக்கைகள் எந்தப் பிரதி தொடர்பாகத் தொடரப்பட்டனவோ அந்தப் பிரதியினையும் அத்துடன் அது எந்த அறிக்கையின், பத்திரத்தின், நிகழ்ச்சிக் குறிப்பின், தீர்மானத்தின் அல்லது நடவடிக்கைகளின் பிரதியொன்றெனக் கொள்ளப்படுகிறதோ அந்த அறிக்கையினை, பத்திரத்தினை, நிகழ்ச்சிக் குறிப்பினை, தீர்மானத்தினை அல்லது நடவடிக்கைகளை, அத்தகைய அறிக்கையையும், பத்திரத்தையும், நிகழ்ச்சிக் குறிப்பையும், தீர்மானத்தையும் அல்லது நடவடிக்கைகளையும் அத்தகைய பிரதியின் சரியாந்தன்மையினையும் உறுதிப்படுத்தும் சத்தியக் கடதாசியொன்றுடன் சேர்த்து அத்தகைய வழக்கு நடவடிக்கைகள் எந்த நீதிமன்றத்தில் நடாத்தப்படுகின்றதோ அந்த நீதிமன்றத்தின் முன்னர் வைக்கலாம்,

அத்துடன், அத்தகைய நீதிமன்றமானது அதன்மேல் உடனடியாக அத்தகைய குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளை நிறுத்திவைத்தல் வேண்டும்

என்பதுடன், அதன்கண் வழங்கப்பட்டதான அதே மன்றாணை முதலியனவும் அத்துடன், ஒவ்வொரு மன்றாணையும் இறுதியாக முடிவுறுத்தப்பட்டனவாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) (அ) பாராளுமன்றத்தின் அல்லது அதன் ஏதேனும் குழுவின் கட்டளைப்படி அல்லது அதிகாரத்தின்கீழ் வெளியிடப்பட்ட அறிக்கை, பத்திரம், நிகழ்ச்சிக் குறிப்பு, தீர்மானம் அல்லது நடவடிக்கைகள், எதனிலுமிருந்து பெற்ற பிரித்தெடுத்த பகுதி அல்லது எதனினதும் சுருக்கம் எதனையேனும்,

(ஆ) எந்த நடவடிக்கையினை வெளியிடுதல் பாராளுமன்றத்தினால் அதிகாரமளிக்கப்பட்டதாக உள்ளதோ அந்த நடவடிக்கையொன்றாக இருக்கும் பாராளுமன்றத்தின் நடவடிக்கைகள் எவற்றினதும், நியாயமானதும் சரியானதுமான அறிக்கையினை,

எவரேனும் ஆள் அல்லது அவரது சேவையாளர் நன்னோக்கத்துடனும் வன்மமின்றியும் வெளியிட்டதற்காக அல்லது வெளியிட்ட காரணத்துக்காக அல்லது வெளியிட்டது தொடர்பாக அத்தகைய ஆள் எவையேனும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுக்கு ஆளானவராகமாட்டார்.

(3) இப்பிரிவின் நோக்கத்திற்காக, "குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள்" என்ற சொல்லமைப்பு, உயர்நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின், மேல் நீதிமன்றத்தின் அல்லது வேறு ஏதேனும் நீதிமன்றத்தின், நியாயசபையின் அல்லது நிறுவனத்தின் அவமதிப்புத் தவறைத் தண்டிப்பதற்கான ஏதேனும் வழக்கு நடவடிக்கையையும் உள்ளடக்கும்.

வெளியார் உட்புகுவதை ஒழுங்குபடுத்துதல்.

**20.** (1) வெளியார் எவரும், பாராளுமன்றத்தினுள் அல்லது அதன் வளவுகளினுள் நுழைவதற்கோ தங்கியிருப்பதற்கோ உரிமைப் படி உரித்துடையவராதல் ஆகாது.

(2) தலைவர் அல்லது சபாநாயகர் தமது தற்றுணிபின்படி, பாராளுமன்றத்தினுள் அல்லது வளவுக்குள் வெளியார் உட்புகுவதை ஒழுங்குபடுத்துவதற்கும், அதில் அமைதியையும் நல்லொழுங்கையும் பேணிவருவதற்கும் அவசியமானவையென கருதக்கூடிய அத்தகைய கட்டளைகளை வழங்குவதற்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றார்.

(3) இப்பிரிவின்கீழ் தலைவரினால் அல்லது சபாநாயகரால் ஆக்கப்பட்ட கட்டளைகளின் பிரதிகள் செயலாளரினால் உரிய முறையில் மெய்யென்றுறுதிப்படுத்தப்பட்டு பாராளுமன்றத்தின் வளவுகளினுள் துலாம்பரமான இடங்களில் வெளிக்காட்டி வைக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன் அத்தகைய பிரதிகள் அவ்வாறு மெய்யென்றுறுதிப்படுத்தப்பட்டு, வெளிக்காட்டி வைக்கப்பட்டதும் அதனால் பாதிக்கப்படும் எல்லா ஆட்களுக்கும் போதிய அறிவித்தலாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) தலைவர் அல்லது சபாநாயகர் வெளியார் எவரையும் பாராளுமன்றத்திலிருந்து அல்லது வளவுகளிலிருந்து வெளியேறுமாறு எந்நேரத்திலும் கட்டளையிடலாம்.

பாராளுமன்றத்தின் நடவடிக்கைகளைக் குழப்பும் ஆள் எழுத்தாணையின்றிக் கைது செய்யப்படலாம்.

**21.** (1) பாராளுமன்றத்தில் அல்லது வளவுகளில், அதன் உள்ளபடியான அமர்வின்போது ஏதேனும் குழப்பத்தை விளைவிக்கும் அல்லது குழப்பத்தில் கலந்துகொள்ளும் ஆள் எவரும், தலைவரின் அல்லது சபாநாயகரின் வாய்மொழிமூல அல்லது எழுத்திலான கட்டளைமீது எழுத்தாணை இன்றி கைது செய்யப்படலாம் என்பதுடன், அத்தகைய ஆள் பாகம் II இன் கீழான தவறொன்றுக்குத் தண்டிக்கப்படுதல் வேண்டுமா அல்லவா என பாராளுமன்றம் தீர்மானிக்கும்வரையில் பாராளுமன்ற அலுவலரொருவரின் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படலாம். ஆனால் அத்தகைய ஆள் எவரும், அமர்வு முடிவடைந்த பின்னர் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படுதல் ஆகாது.

(2) மேற்சொல்லப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் கட்டளையைப் பின்பற்றி எவரேனும் ஆளைக் கைதுசெய்து, தடுத்துவைப்பதில் உதவுமாறு அனைத்து பொலிசு அலுவலர்களும், கொஸ்தாப்புக்களும், ஏனைய ஆட்களும் இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

## பாகம் II

## பாராளுமன்றச் சிறப்புரிமை மீறல்களும் அதற்கான தண்டனையும்

சிறப்புரிமை மீறல்கள்.

**22.** (1) இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட செயல்கள் அல்லது செய்யாமைகள் ஒவ்வொன்றும், பாராளுமன்றச் சிறப்புரிமைகளின் மீறல் ஒன்றாக இருத்தல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

[பி 2. 1978 இன் 5]
[பி 2. 1997 இன் 27]

*(2) இச்சட்டத்திற்கான அட்டவணையில் (அதன் பாகம் அ என்பதிலாயினுஞ்சரி அல்லது பாகம் ஆ என்பதிலாயினுஞ்சரி) குறித்துரைக்கப்பட்ட பாராளுமன்றச் சிறப்புரிமைகள் மீறல் ஒவ்வொன்றும் இதனகத்துப் பின்னர் அதன் சார்பில் அடங்கியுள்ள ஏற்பாடுகளின்கீழ் இப்பாகத்தின்கீழ் உயர்நீதிமன்றத்தால் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றாதல் வேண்டும் ; அத்துடன்

[பி 2. 1978 இன் 5]
[பி 2. 1997 இன் 27]

(3) இச்சட்டத்திற்கான அட்டவணையின் பாகம் ஆ என்பதில் குறித்துரைக்கப்பட்டதும் பாராளுமன்றம் சம்பந்தமாக அல்லது அது தொடர்பில் புரியப்பட்டதுமான பாராளுமன்றச் சிறப்புரிமைகள் மீறல் ஒவ்வொன்றும், இப்பாகத்தின்கீழ் அதன் சார்பில் அடங்கியுள்ள ஏற்பாடுகளின்கீழ் பாராளுமன்றத்தால் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றாதல் வேண்டும்.

சிறப்புரிமை மீறல்கள் வழக்குகளின் உயர்நீதிமன்றத்தின் நியாயாதிக்கம்.

**23.** (1) சட்டத்துறைத் தலைமையதிபதியினால் அதன்சார்பில் உயர்நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீதும், சத்தியக்கடதாசி மீதான சான்றுமூலம் ஆதாரப்படுத்தப்பட்டதன் மீதும், நீதிமன்றமானது —

[பி 2. 1987 இன் 37]

(அ) விண்ணப்பத்தையும், அத்தகைய சான்றையும் நுணுகி ஆராய்ந்த பின்னர் எவரேனும் உறுப்பினர் அல்லது வேறு ஆள் இப்பாகத்தின்கீழ் ஏதேனும் தவறைப் புரிந்துள்ளவராகக் காணப்படுவதாகத் திருப்தியடைந்தால், அத்தவறுக்காக ஏன் அவரைத் தண்டித்தலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு தேவைப்படுத்தி அத்தகைய உறுப்பினருக்கு அல்லது ஆளுக்கு அறிவித்தல் சேர்ப்பிக்கலாம் ; அத்துடன்

(ஆ) மேற்சொல்லப்பட்டவாறு காரணம் எதுவும் அல்லது போதிய காரணம் எதுவும் நீதிமன்றம் திருப்தியடையும் வண்ணம் காட்டப்படாவிடில், நீதிமன்றம் அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணையின்பின்னர், தவறுக்காக அவருக்குக் குற்றத்தீர்ப்பளித்து, அவருக்கு இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியற்றண்டனை அல்லது **குற்றப்பணத் தண்டனைத் தீர்ப்பளிக்கலாம்.

*[(2)] விட்டுவிடப்பட்டுள்ளது. [பி 3, 1997 இல் 27]

உயர்நீதிமன்றத்தில் நடவடிக்கைமுறை.

**24.** பிரிவு 23 இன்கீழ் உயர் நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீதான நடவடிக்கைகளும், பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறையும் அரசியலமைப்பின் 136ஆவது உறுப்புரையின்கீழ் அந்நோக்கத்துக்கென ஆக்கப்பட இத்தால் அதிகாரமளிக்கப்பட்டவாறான அத்தகைய விதிகள் எவையேனுமிருப்பின், அவற்றிற்கமைய, பிரதம நீதியரசரால் அல்லது விண்ணப்பத்தை விசாரிக்கும் இளம் நீதியரசரால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகையனவாக இருத்தல் வேண்டும்; அத்தகைய நடவடிக்கைகள் தொடர்பிலும், அதன் நோக்கங்களுக்காகவும், உயர் நீதிமன்றம், ஆட்களின் வருகையைக் கட்டாயப்படுத்துவதற்காகவாயினுஞ்சரி ஆவணங்களைக் காண்பித்தற்காகவாயினுஞ்சரி அல்லது வேறு வகையிலாயினுஞ்சரி, நீதிமன்றம் அதன் சாதாரண நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் கொண்டிருக்கக்கூடிய அதே தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

உயர்நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்யப்படுவதற்கு முன்வரான நிபந்தனைகள்.

**25.** (1) ஏதேனும் பாராளுமன்றம் சம்பந்தமாக அல்லது பாராளுமன்றம் தொடர்பில் இப்பாகத்தின் கீழ்ச் சார்த்தப்பட்ட ஏதேனும் தவறின் விடயத்தில்,

(அ) சட்டத்துறைத் தலைமையதிபதியின் அபிப்பிராயப்படி, அவ்விடயத்தில் இச்சட்டத்தின்கீழ் மேற்கொண்டு நடபடிகள் எடுப்பதைத் தேவைப்படுத்துவதற்குப் போதிய சான்று இருக்கின்றது எனக்

கூறும் அறிக்கையொன்றைச் சட்டத்துறைத் தலைமையதிபதி அந்த பாராளுமன்றத்தின் தலைவருக்கு அல்லது சபாநாயகருக்குக் கொடுத்திருந்தால் மட்டுமே ; அத்துடன்

(ஆ) அந்தப் பாராளுமன்றம், அத்தகைய அறிக்கையைச் சீர்தூக்கிப் பார்த்தபின்னர், தீர்மானம்மூலம் சட்டத்துறைத் தலைமையதிபதியை விண்ணப்பம் செய்யுமாறு தேவைப்படுத்தியிருந்தால் மட்டுமே.

23 ஆம் பிரிவின்கீழான விண்ணப்பம் ஒன்று சட்டத்துறைத் தலைமையதிபதியினால் உயர்நீதிமன்றத்திற்குச் செய்யப்படலாம்.

(2) எவ்விடயத்திலும் 23 ஆம் பிரிவின்கீழ் சட்டத்துறைத் தலைமையதிபதியினால் விண்ணப்பம் ஒன்று செய்யப்படுதலானது, அவ்விண்ணப்பம் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கு இணங்க உரியமுறையில் செய்யப்பட்டிருக்கின்றது என்பதற்கு முடிவான சான்றாக அமைதல் வேண்டும்.

விடயங்களை கூற்றுக்களுடன் சட்டத் துறைத் தலைமையதிபதிக்கு ஆற்றுப் படுத்தல்.

26. (1) இப்பாகத்தின்கீழ்ச் சார்த்தப்பட்ட தவறொன்று பற்றிய ஏதேனும் விடயம் தொடர்பில் சட்டத்துறைத் தலைமையதிபதி அறிக்கையொன்றைக் கொடுத்துதவுவதை இயலச்செய்யும் நோக்கத்துக்காக, விடயத்திற்கேற்ப, தலைவர் அல்லது சபாநாயகர் —

(அ) சார்த்தப்பட்ட தவறு பற்றிய முறைப்பாடு அவையில் எவரேனும் உறுப்பினரால் அவருக்குச் செய்யப்பட்டதன்மேல், அல்லது

(ஆ) பாராளுமன்றத்தின் தீர்மானம்மூலம் அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தப்பட்டால்,

அவ்விடயத்தை அறிக்கைக்கென சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்தலாம்.

(2) விடயம் ஒன்று (1) ஆம் உட்பிரிவின்கீழ்ச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்தப்படவுள்ளவிடத்து, தலைவர் அல்லது சபாநாயகர் அல்லது வேறு எவரேனும் உறுப்பினர், தலைவரினால் அல்லது சபாநாயகரினால் அல்லது அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்டிருப்பின் பாராளுமன்றத்தின் செயலாளரினால் அவ்வாறு செய்வதற்கு எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டிருந்தால் —

(அ) சார்த்தப்பட்ட தவறு பற்றிய முறைப்பாட்டைச் செய்யும் உறுப்பினரின் கூற்றைச் சத்தியத்தின்மீது அல்லது உறுதியுரையின்மீது பதிதல் வேண்டும், அத்துடன்

(ஆ) தலைவரின் அல்லது சபாநாயகரின் அபிப்பிராயப் படி அவரது சான்று இயைபானதாகவிருக்கின்ற அல்லது இயைபானதாகவிருக்கக்கூடிய வேறு எவரேனும் ஆளின் கூற்றை சத்தியத்தின்மீது அல்லது உறுதியுரையின்மீது பதியலாம்.

தலைவர் அல்லது சபாநாயகர் தமது சொந்தப் பிரேரணையின் பேரிலோ, சட்டத்துறைத் தலைமையதிபதியின் வேண்டு கோளின்பேரிலோ அவசியமானதெனக் கருதினால், சட்டத் துறைத் தலைமையதிபதிக்கு விடயம் ஆற்றுப்படுத்தப்பட்ட பின்னர் எந்நேரத்திலும் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடு களின்கீழ் எவரேனும் ஆளின் கூற்றுப் பதியப்படலாம்.

(3) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் கூற்றுக்கள் பதியப்படுவதை இயலச்செய்யும் நோக்கத்துக்காக, 10 முதல் 13 வரையிலான பிரிவுகளின் ஏற்பாடுகள், ஒரு குழுவினால் சான்று எடுக்கப்படுவதை இயலச்செய்யும் நோக்கத்துக்காக அவை ஏற்புடைத்தாகின்ற அதேமுறையில் எல்லா வகையிலும் ஏற்புடையனவாதல் வேண்டும். அத்துடன் மேற்கூறிய நோக்கத்துக்காக, இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவினால் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய கூற்றை எடுக்க அதிகார மளிக்கப்பட்ட ஆள், குழுவுக்கு அல்லது அதன் தவிசாளருக்கு அப்பிரிவுகளினால் அளிக்கப்பட்டவாறான அதே தத்துவங் களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக அளிக்கப்பட்ட ஏதேனும் சான்றுக்கும், சான்று தொடர்பிலும் 15 முதல் 17 வரையிலான பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்புடையன வாதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் எது எப்படி யிருப்பினும், இப்பாகத்தின்கீழ் தவறொன்றைப் புரிந்துள்ள வராகச் சார்த்தப்பட்ட ஆளொருவர், அத்தவறு தொடர்பில், (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் கூற்றை அவரது சம்மதமின்றிச் செய்யப் பணிக்கப்படுதலோ, கட்டாயப்படுத்தப்படுதலோ ஆகாது.

(6) விடயமொன்று, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அறிக்கைக்கென சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்தப்படுமிடத்து, (2) ஆம் உட்பிரிவின்கீழ் எடுக்கப்பட்ட எல்லாக் கூற்றுக்களும் பற்றிய பதிவேடு சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், சட்டத்துறைத் தலைமையதிபதி அத்தகைய கூற்றுக்களை ஆராய்ந்து பார்த்தபின்னர், அவரது அபிப்பிராயப்படி, இப்பாகத்தின்கீழ் சார்த்தப்பட்ட தவறொன்று தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுப்பதைத் தேவைப்படுத்துவதற்குப் போதிய சான்று இருக்கின்றதா என எடுத்துக்கூறித் தலைவருக்கு அல்லது சபாநாயகருக்கு அறிக்கையிடுதல் வேண்டும்; அத்தகைய அறிக்கையானது, பாராளுமன்றத்தின் தகவலுக்காக, சட்டத்துறைத் தலைமையதிபதியின் அபிப்பிராயப்படி கூற்றுக்களில் அடங்கியுள்ள சான்றின்மீது எண்பிக்கப்பட இயலுமான நிகழ்வுகள் பற்றிய பொழிப்பொன்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

அட்டவணையின் பாகம் ஆ என்பதில் குறித்துரைக்கப்பட்ட தவறுகள்மீது பாராளுமன்றத்தில் நியாயாதிக்கம்.
[பி 3, 1978 இல் 5]
[பி 4, 1997 இன் 27]

27. [(1) உட்பிரிவுகள் (2) அத்துடன் (3) என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய பாராளுமன்றமானது, இச்சட்டத்திற்கான அட்டவணையின் பாகம் ஆ என்பதில் குறித்துரைக்கப்படுவதும் எவரேனும் உறுப்பினரால் அல்லது வேறு எவரேனும் ஆளினால் பாராளுமன்றம் சம்பந்தமாக அல்லது அது தொடர்பில் புரியப்படுவதுமான பாராளுமன்றச் சிறப்புரிமைகளின் மீறுகை எதனையும் சுருக்கமுறையில் தண்டிப்பதற்கான தத்துவமும் நியாயாதிக்கமும் கொண்டிருத்தல் வேண்டும்.]

[பி 2, 1978 இல் 5]

*(1அ) விட்டுவிடப்பட்டுள்ளது.

(2) இதனகத்துமுன்னர் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்தப்பட்டிருக்கின்ற ஏதேனும் விடயத்தில் சட்டத்துறைத் தலைமையதிபதியினது அபிப்பிராயப்படி சார்த்தப்பட்ட தவறு தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுப்பதைத் தேவைப்படுத்துவதற்குப் போதிய சான்று உள்ளது என்னும் பயன்படவமைந்த அறிக்கையொன்று 26 ஆம் பிரிவின்கீழ் சட்டத்துறைத்தலைமையதிபதியினால் கொடுத்துதவப்பட்டிருந்தாலேயொழிய, இப்பாகத்தின்கீழ் ஏதேனும் தவறைத் தண்டிப்பதற்கு பாராளுமன்றம் தகுதிவாய்ந்ததாதல் ஆகாது.

* 1997 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, பாராளுமன்ற (தத்துவங்களும், சிறப்புரிமைகளும்) (திருத்தச்) சட்டத்தின் 4 ஆம் வாசகத்தைப் பார்க்கவும்.

(3) இருபத்திமூன்றாம் பிரிவின்கீழ் விண்ணப்பமொன்று உயர்நீதிமன்றத்திற்குச் செய்யப்பட்டிருக்கின்ற ஏதேனும் விடயத்தில், இப்பாகத்தின்கீழான ஏதேனும் தவறை பாராளுமன்றம் கவனத்துக்குட்படுத்தவோ தண்டிக்கவோ தகுதிவாய்ந்ததாதல் ஆகாது.

*27. (அ) விட்டுவிடப்பட்டுள்ளது [பி 4, 1978 இல 5] [பி 5, 1997 இல 27]

[28. இப்பாகத்தின்கீழ் ஏதேனும் தவறுக்காகப் பாராளுமன்றத்தினால் விதிக்கப்படக்கூடிய தண்டனையானது, பாராளுமன்றத்தின் அவை வரம்பில் நிறுத்தி எச்சரித்தலாகிய அல்லது பாராளுமன்ற வளவுகளிலிருந்து அகற்றுதலாகிய தண்டனையாக இருத்தல் வேண்டும் :

பாராளுமன்றம் விதிக்கக்கூடிய தண்டனை. [பி 5, 1978 இல் 5] [பி 3, 1987 இல் 37] [பி 4, 1997 இல் 27]

ஆயினும், எவ்வாறாயினும், பாராளுமன்ற உறுப்பினரொருவரால் புரியப்படும் தவறொன்றின் விடயத்தில், பாராளுமன்றமானது, இதனகத்துமுன்னர் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தண்டனைக்கு மேலதிகமாக அல்லது அதற்குப் பதிலாக, அவரை ஒரு மாதத்திற்கு மேற்படாத ஏதேனும் காலப்பகுதிக்குப் பாராளுமன்றத்தின் சேவையிலிருந்து விலக்கிவைக்குமாறு கட்டளையிடலாம் :

ஆயினும், மேலும், உறுப்பினரொருவராக அல்லாத ஆளொருவரால் புரியப்படும் ஏதேனும் தவறொன்றின் விடயத்தில் பாராளுமன்றமானது, அத்தகைய ஆள் ஆறுமாதங்களுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்குப் பாராளுமன்றத்திற்குள் அல்லது அதன் வளவுகளுக்குள் பிரவேசிப்பதினின்று தடைசெய்யப்பட வேண்டுமெனவும் கட்டளையிடலாம்.

29. இருபத்தெட்டாம் பிரிவின்கீழ் பாராளுமன்றத்தின் வரம்பில் எச்சரித்து நிறுத்திவைப்பதற்காக எவரேனும் ஆளின் வருகையைப் பெறும் நோக்கத்துக்காக அல்லது அப்பிரிவின்கீழ் அவரது அகற்றுகை கட்டளையிடப்பட்டிருக்கின்ற அல்லது அவரது நுழைவு தடைசெய்யப்பட்டிருக்கின்ற எவரேனும் ஆளை பாராளுமன்றத்தின் வளவுகளிலிருந்து அகற்றும்

தண்டனைகளை நிறைவேற்றுவதற்காகக் கைது செய்வதற்கான தத்துவம்.

* 1997 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, பாராளுமன்ற (தத்துவங்களும், சிறப்புரிமைகளும்) (திருத்தச்) சட்டத்தின் 5 ஆம் வாசகத்தைப் பார்க்கவும்.

நோக்கத்துக்காக, விடயத்திற்கேற்ப, வாயிற் பெருமகன் அல்லது படைக்கலச் சேவிதன் அல்லது பாராளுமன்றத்தின் வேறு எவரேனும் அலுவலர், தலைவரினால் அல்லது சபாநாயகரினால் அவ்வாறு செய்யுமாறு கட்டளையிடப்பட்டால், அத்தகைய ஆளை பாராளுமன்றத்தின் வளவுகளினுள் எந்த இடத்திலும் எழுத்தாணையின்றிக் கைதுசெய்தலும், மேற்சொல்லப்பட்ட நோக்கத்துக்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய நியாயமான வலோற்காரத்தைப் பயன்படுத்தலும் அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

சிறப்புரிமை மீறல் விடயங்களில் நடவடிக்கை முறைக்கான நிலையியற் கட்டளைகள்.

**30.** பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள், இப்பாகத்தின்கீழ் சார்த்தப்பட்ட தவறுகளின் விடயத்தில் அப்பாராளுமன்றத்தில் அல்லது தலைவரினால் அல்லது சபாநாயகரினால் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை தொடர்பில் இடைநேர்விளைவான அல்லது குறைநிரப்புக்கான ஏற்பாட்டை உள்ளடக்கியிருக்கலாம் என்பதுடன், குறிப்பாக, சிறப்புரிமைக் குழுக்களின் நியமனம், அவற்றின் தத்துவங்கள், பணிகள், நடவடிக்கைமுறை ஆகியவற்றுக்கும் ஏற்பாடு செய்யலாம்.

குற்றவழக்குகளுக்கும், குடியியல் வழக்குகளுக்கு உறுமை பேணல்.

**31.** (1) இப்பாகத்தின்கீழ் தவறொன்றாக அமைவதாக இச்சட்டத்தினால் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் செயல் அல்லது செய்யாமை வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தவறொன்றாக அமையுமிடத்து அத்தகைய செயலுக்கு அல்லது செய்யாமைக்கு குற்றவாளியாகவுள்ள ஆள் ஒருவர், வேறு ஏதேனும் சட்டத்தில் எது எப்படியிருப்பினும், இரு தவறுகளுக்குமாக விளக்கப்பட்டு, தண்டிக்கப்பட ஆளாதல் வேண்டும்.

(2) ஏதேனும் செயல் அல்லது செய்யாமை இப்பாகத்தின்கீழ் தவறாக அமைந்திருப்பினுங்கூட, இச்சட்டத்தில் உள்ள எதுவும், அத்தகைய செயல் அல்லது செய்யாமை தொடர்பில் அல்லது அதன் காரணமாக கிடைக்கத்தக்கதாகவுள்ள சேதவீடுகளுக்குமாக அல்லது வேறு ஏதேனும் பரிகாரத்துக்காக ஏதேனும் குடியியல் வழக்கு அல்லது நடவடிக்கை எவரேனும் ஆளுக்கு எதிராகத் தொடுக்கப்படுவதை அல்லது பேணிவரப்படுவதைத் தடுப்பதாகவோ மட்டுப்படுத்துவதாகவோ பொருள்கொள்ளப்படுதல் ஆகாது.

32. இச்சட்டத்திலுள்ள எதுவும், எவரேனும் ஆளின்மீது, அட்டவணையின் பாகம் ஆ என்பதில் குறித்துரைக்கப்படும் ஏதேனும் தவறுக்கு இச்சட்டத்தின் 28 ஆம் பிரிவால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் தண்டனையை விதிப்பதற்கான ஏதேனும் தத்துவத்தைத் தவிர வேறு ஏதேனும் தண்டனையை விதிப்பதற்கான தத்துவம் எதனையும் பாராளுமன்றத்திற்கு அளித்தலோ அல்லது அளிப்பதாகப் பொருள்கொள்ளப்படுதலோ ஆகாது.

பாராளுமன்றத் தண்டனைத் தத்துவத்தை வரையறை செய்தல்.

[பி 6, 1978 இன் 5]
[பி 7, 1997 இன் 27]

## அட்டவணை

[பி 7, 1978 இன் 5]

### பாகம் அ

[பி 8, 1987 இன் 2]

உயர்நீதிமன்றத்தினால் மாத்திரம் தண்டிக்கப்படற்பாலதான தவறுகள்."

1. பாராளுமன்றத்திற்கு வந்துகொண்டிருக்கும் அல்லது சபையிலிருந்து சென்றுகொண்டிருக்கும் அல்லது சபையில் அல்லது ஏதேனும் குழுவில் அவரது நடத்தை காரணமாக எவரேனும் உறுப்பினரைத் தாக்குதல், நிந்தை செய்தல் அல்லது வேண்டுமென்று தடுத்தல் அல்லது வலோற்காரத்தின்மூலம், நிந்தை மூலம் அல்லது தொல்லைமூலம் பாராளுமன்றம் முன்னர் அல்லது குழுமுன்னர் முடிவுறாதிருக்கும் அல்லது கொணரப்பட எதிர்பார்க்கப்படும் ஏதேனும் முன்மொழிவுக்கு அல்லது கருமத்துக்குச் சாதகமாக அல்லது எதிராக அவரை வெளிப்படுத்தச்செய்யுமாறு கட்டாயப்படுத்த முயலுதல்.

2. பாராளுமன்றத்தில் அல்லது குழுவில் அவர் நடந்து கொண்ட விதம் காரணமாக ஏதேனும் அச்சுறுத்தல் கடிதத்தை ஓர் உறுப்பினருக்கு அனுப்புதல் அல்லது சண்டைக்கு வருமாறு ஓர் உறுப்பினருக்குச் சவால் விடுதல்.

3. பாராளுமன்றத்தின் முன்னர் அல்லது ஏதேனும் குழுமுன்னர் அவரால் கொடுக்கப்படவேண்டிய சான்று தொடர்பில் ஏதேனும் சாட்சிக்காரருடன் தலையிடுதல், அவரைத் தடைசெய்தல், அச்சுறுத்துதல், மருட்டுதல் அல்லது எந்தவிதத்திலும் முறைகேடாகச் செல்வாக்குக்குட்படுத்தல்.

4. பாராளுமன்றத்தை அல்லது ஏதேனும் குழுவை ஏமாற்றும் கருத்துடன் ஏதேனும் பொய்யான, உண்மையற்ற, போலி, புனையப்பட்ட அல்லது பொய்யாக்கப்பட்ட ஆவணத்தை பாராளுமன்றத்தில் அல்லது ஏதேனும் குழுவில் சமர்ப்பித்தல்.

5. பாராளுமன்றத்தின் அல்லது ஒரு குழுவின் ஏதேனும் விவாதம் அல்லது நடவடிக்கைகள் பற்றிய ஏதேனும் பொய்யான அல்லது திரிபாக்கப்பட்ட ஏதேனும் அறிக்கையை வேண்டுமென்று வெளியிடுதல் அல்லது பாராளுமன்றத்தில் அல்லது குழுவில் உறுப்பினர் ஒருவரினால் செய்யப்பட்ட ஏதேனும் பேச்சை வேண்டுமென்று திரித்து வெளியிடுதல்.

6. பாராளுமன்றத்தினால் அல்லது குழுவினால் அதன் வெளியீடு தடைசெய்யப்பட்டதான பாராளுமன்றத்தின் அல்லது குழுவின் ஏதேனும் விவாதம் அல்லது நடவடிக்கைகள் பற்றிய ஏதேனும் அறிக்கையை வேண்டுமென்று வெளியிடுதல்.

[பி 2, 1980 இன் 17] 6அ. பாராளுமன்ற விவாதங்களின் உத்தியோகபூர்வ அறிக்கை ஏட்டிலிருந்து (ஹன்சார்ட்) எவையேனும் சொற்களை அல்லது கூற்றுக்களை அகற்றிவிடுமாறு சபாநாயகரால் கட்டளையிடப்பட்டதன்பின்னர் அத்தகைய சொற்களை அல்லது கூற்றுக்களை கொண்டுள்ளனவான, பாராளுமன்றத்தின் ஏதேனும் விவாதம் அல்லது நடவடிக்கைகள் பற்றிய ஏதேனும் அறிக்கையை வேண்டுமென்றே வெளியிடுதல்.

7. பாராளுமன்றத்தின் நடவடிக்கைகளையும் குண நலனையும் பாதிக்கும் அவதூறான கூற்று எதனையும் வெளியிடுதல்.

8. உறுப்பினர் என்ற தன்மையில் அவரது நடத்தை சம்பந்தமான ஏதேனும் அவதூறான கூற்றை வெளியிடுதல்.

9. பாராளுமன்றத்தின் எவரேனும் உறுப்பினரால் அல்லது அலுவலரால், அத்தகைய உறுப்பினர் அல்லது அலுவலர் என்ற அவரது நடத்தையில் அவரைச் செல்வாக்குக்குட்படுத்துவதற்காக இலஞ்சம் கொடுக்கப்படுதல் அல்லது ஏற்றுக்கொள்ளப்படுதல் அல்லது சபையில் அல்லது ஏதேனும் குழுவில் சமர்ப்பிக்கப்பட்ட அல்லது சமர்ப்பிக்கப்படக் கருதப் பட்ட ஏதேனும் சட்டமூலத்தை, தீர்மானத்தை, கரு மத்தை, விதியை அல்லது விடயத்தை ஊக்குவிப் பதற்கான அல்லது எதிர்ப்பதற்கான ஏதேனும் கட்டணமாக, நட்டஈடாக, நன்கொடையாக அல்லது வெகுமதியாக எவரேனும் உறுப்பினருக்கு அல்லது பாராளுமன்றத்தின் அலுவலருக்கு வழங்க முனைதல் அல்லது அவரால் ஏற்றுக்கொள்ளப்படுதல்.

10. அரசாங்க அழுத்தகரினால் அல்லது பாராளு மன்றத்தின் அல்லது ஏதேனும் குழுவின் அதிகாரத் தினால் அல்லது அதிகாரத்தின்கீழ் அச்சிடப்பட்டதாகக் கொள்ளப்படுவதும், ஆனால் உண்மையில் அவ்வாறு அச்சிடப்படாததுமான ஏதேனும் சட்டத்தின், கட்டளைச் சட்டத்தின் அல்லது பாராளுமன்றத்தின் அல்லது ஏதேனும் குழுவின் ஏதேனும் அறிக்கையின், பத்திரத்தின், கூட்டக்குறிப்புகளின் அல்லது குறிப்பு களின் அல்லது நடவடிக்கைகளின் பிரதியொன்றை அச்சிடுதல் அல்லது மேற்சொல்லப்பட்டவாறான ஏதேனும் அத்தகைய பிரதியை சான்றாக முன்வைத் தல்.

11. முற்போந்த பந்திகளுள் எதிலேனும் குறித்துரைக் கப்பட்ட ஏதேனும் செயலுக்கு அல்லது தவிர்வுக்கு உடந்தையளித்தல்.

## பாகம் "ஆ"

ஒன்றில் பாராளுமன்றத்தினால் அல்லது உயர் நீதிமன்றத்தினால் தண்டிக்கப்படற்பாலனவான தவறுகள்

1. இச்சட்டத்தின்கீழான பாராளுமன்றத்தின் ஏதேனும் கட்டளைக்கு அல்லது தீர்மானத்துக்கு அல்லது இச் சட்டத்தின்கீழ் முறையாக ஆக்கப்பட்டதான சனாதிபதியின் அல்லது சபாநாயகரின் அல்லது எவரேனும் உறுப்பினரின் ஏதேனும் கட்டளைக்குக் கீழ்ப்படிய, வேண்டுமென்று தவறுதல் அல்லது மறுத்தல்.

2. அத்தகைய சமுகமளித்தல் அல்லது காண்பிப்பு சட்டத்தின் 13 ஆம் பிரிவிலும் 15 ஆம் பிரிவிலும் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக மன்னிப்பளிக்கப்பட்டாலொழிய, பாராளுமன்றத்தினால் அல்லது அதன் சார்பில் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் குழுவினால் சமுகமளிக்குமாறு அல்லது பத்திரங்களை, நூல்களை, பதிவேடுகளை அல்லது ஆவணங்களைக் காண்பிக்குமாறு இடப்பட்ட கட்டளைக்கு வேண்டுமென்று கீழ்ப்படியத் தவறுதல்.

3. அத்தகைய மறுப்பு 13 ஆம் பிரிவிலும் 15 ஆம் பிரிவிலும் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக மன்னிக்கப்பட்டாலொழிய, பாராளுமன்றத்தின் முன்னர் அல்லது ஏதேனும் குழுவின்முன்னர் விசாரணை செய்யப்படுவதற்கு அல்லது சபையினால் அல்லது ஏதேனும் குழுவினால் கேட்கப்படும் ஏதேனும் சட்டபூர்வமான மற்றும் இயைபான கேள்விக்கு விடையளிக்க மறுத்தல்.

4. பாராளுமன்றத்தில் அல்லது குழுவில் அல்லது பாராளுமன்ற வளவுகளுக்குள் எவரேனும் உறுப்பினரைத் தாக்குதல், நிந்தை செய்தல் அல்லது வேண்டுமென்று தடுத்தல்.

5. மன்ற அறையில் அல்லது குழுவில் அல்லது பாராளுமன்ற வளவுகளுக்குள் பாராளுமன்றத்தின் அலுவலரைத் தாக்குதல் அல்லது எதிர்த்தல் அல்லது வேண்டுமென்று தலையிடுதல்.

6. மன்ற அறையில் அல்லது குழுவில் அல்லது பாராளுமன்றத்திற்குச் சமீபமாக பாராளுமன்றம் அல்லது ஏதேனும் குழு அமர்வில் இருக்கும்போது, அப்பாராளுமன்றத்தின் அல்லது குழுவின் நடவடிக்கைகள் குழப்பப்படுகின்றன அல்லது குழப்பப்படக் கூடும் என நம்புவதற்கு நியாயமான காரணங்களைத் தெரிந்துகொண்டு அல்லது அறிந்துகொண்டு ஏதேனும் குழப்பத்தை உண்டுபண்ணுதல் அல்லது அதில் சேர்ந்து கொள்ளுதல்.

7. பாராளுமன்ற வளவுக்குள் மரியாதையீனமான நடத்தை.

8. பாராளுமன்றத்தின் முன்னர் அல்லது குழுமுன்னர் சாட்சிக்காரர் ஒருவராக இருந்து மறுப்பிப் பேசுதல் அல்லது வேறு துர்நடத்தை.

9. குழுவின் நடவடிக்கைகள் எவற்றையும், அவை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்படுமுன்னர் வெளியிடுதல்.

10. முற்போந்த பந்திகள் எதிலும் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் செயலுக்கு அல்லது தவிர்வுக்கு உடந்தையளித்தல்.